# பெயர் மாற்றத்தை விட சிந்தனை மாற்றமே தேவை!

## ராஜ்பவன்களின் பெயர் மாற்றம் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவு!

**சென்னை, டிச.2**

**சட்டமன்றத்தை மதிக்காதவர்கள் ராஜ்பவன்களின் பெயரை 'மக்கள் மாளிகை' எனப் பெயர் மாற்றம் செய்வது கண்துடைப்பா என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வினா எழுப்பியுள்ளார்.**

மாநிலங்களில் உள்ள ராஜ்பவன்களின் பெயர் மாற்றம் தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**பெயர் மாற்றத்தைவிடச் சிந்தனை மாற்றமே தேவை!**

**சட்டமன்றம் = மக்கள் மன்றம்! சட்டமன்றத்தை மதிக்காதவர்கள், "மக்கள் மாளிகை" எனப் பெயர் மாற்றுவது கண்துடைப்பா? மக்களாட்சித் தத்துவத்தின் கண்களில் மண்ணைத் தூவுவதற்கா?**

**மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளையும், மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற இறையாண்மையுள்ள சட்டமன்றத்தையும் மதிப்பதுதான் இப்போதைய தேவை!**

**சிந்தனையிலும் செயலிலும் மாற்றம் இல்லையெனில், இதுவும் தேவையற்றதே!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

### தமிழ்நாட்டு மக்களின் குரலை ஒன்றிய பா.ஜ.க. அரசு புறக்கணிப்பது சரியா?

# நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் - தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதிகளிடம் - ஒன்றிய பா.ஜ.க. அரசு பதில் சொல்லியே ஆக வேண்டும்!

## வலைதளப்பதிவில் — முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, டிச.2-

நாடாளுமன்ற கூட்டத்தொடர் தொடங்குகிற நிலையில்., முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், விடுத்த சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டே, தமிழ்நாட்டு மக்களின் குரலை ஒன்றிய பா.ஜ.க. அரசு புறக்கணிப்பது சரியா?**

**தமிழ்நாட்டின் கோரிக்கைகளை தேவைகளைக் கடிதங்களாக, நேரில் மனுக்களாக, சட்டமன்றத் தீர்மானங்களாக எடுத்துச் சொல்லியும் காதில் வாங்காமல் இருப்பது நியாயமல்ல!**

**அதிகமான வரி வருவாயைத் தரும் மாநிலமான தமிழ்நாட்டுக்கு வஞ்சனை செய்வதை மனச்சாட்சியுள்ள யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.**

**உங்கள் வஞ்சனைகளைக் கடந்துதான் நாட்டிலேயே அதிகமான 11.19% பொருளாதார வளர்ச்சியை அடைந்திருக்கிறோம்.**

**குட்ட குட்ட குனிய மாட்டோம்; நிமிர்ந்து நடைபோடுவோம்!**

**வருகின்ற நாடாளுமன்றக் கூட்டத்தொடரில், தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதிகளிடம் ஒன்றிய பா.ஜ.க. அரசு பதில் சொல்லியே ஆகவேண்டும்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### 'டித்வா' புயல்: பாதிப்பிலிருந்து பொதுமக்களை பாதுகாக்க

# தயார் நிலையில் 6 ஆயிரம் நிவாரண முகாம்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நடவடிக்கை! அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பேட்டி!

**சென்னை, டிச. 2 -**

**'டித்வா' புயல் பாதிப்பிலிருந்து பொது மக்களைப் பாதுகாக்க முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார். இதனைத் தொடர்ந்து தயார் நிலையில் ஆறாயிரம் நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.**

'டிட்வா' புயல் தமிழகத்தை நோக்கி நெருங்கி வருவதால் புயல் முன்னெச்ச ரிக்கை நடவடிக்கை தொடர்பாக மாவட்ட ஆட்சியர்களுடன் சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசர கால கட்டுப்பாட்டு மையத்தில் நேற்று முன்தினம் வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் ஆலோசனை நடத்தினார்.



அப்போது புயலின் தாக்கம், எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்தார். ராமநாதபுரம் மாவட்டம் மற்றும் டெல்டா மாவட்டங்களில் மழை நிலவரம் குறித்து கேட்டறிந்த அமைச்சர் பொதுமக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

**பொதுமக்களுக்கு முதல்வர் அறிவுரை!**

இதை தொடர்ந்து டிட்வா புயல் எச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் நிருபர்களிடம் கூறியதாவது:

நாகையில் இரு பகுதிகளில் அதிக மழைப்பொழிவு இருந்தது. மழையால் இதுவரை மிகப்பெரிய பாதிப்பு இல்லை. அந்தந்த மாவட்ட கலெக்டர்களுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தி அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகிறது. புயல் கரையை கடக்கும்வரை வெளியே வரவேண்டாம் என்ற முதல்வ ரின் அறிவுரையைப் பின்பற்ற வேண்டும். ராமநாதபுரம், புதுக் கோட்டை, நாகை உள்ளிட்ட மாவட்ட ஆட்சியர்களுடன் ஆலோசனை நடந்தது.

நாகை மாவட்டம் தோப்புத்துறையில் 20 செ.மீ. மழை பதிவாகி உள்ளது. சென்னையை ஒட்டி புயல் செல்லும் என வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. இதனால் கடற்கரையோரம் யாரும் செல்ல வேண்டாம். 28 பேரிடர் மீட்புக் குழுக்கள் தயார் நிலையில் உள்ளன. மேலும் 10 குழுக்கள் பிற மாநிலங்களில் இருந்து விமானம் மூலம் வரவைக்கப்பட்டுள்ளனர். விமானப்படை மற்றும் கடலோர காவல் படைக்கும் எச்சரிக்கை அளிக்கப்பட்டுள்ளது.

மழை பாதிப்பை பொறுத்து தேவையான மாவட்டங்களுக்கு கூடுதல் கண்காணிப்பு அலுவலர்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீட்பு பணிகளுக்காக ஹெலிகாப்டர்களின் உதவியை நாடவும் அறிவுறுத்தி இருக்கிறோம். இதுவரை போக்கு வரத்து பாதிப்பு, உயிரிழப்பு இல்லை. 16 கால்நடைகள் மரணமடைந்துள்ளன, 24 குடிசைகள் சேதம் அடைந்துள்ளன.

எந்தெந்த துறை அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை பார்த்து, துறை சார்ந்த மூத்த அதிகாரிகளை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் 6 ஆயிரத்திற்கும் அதிகமான நிவாரண முகங்கள் தயார் நிலையில் உள்ளன. டிட்வா புயல் சென்னையை தாக்குமா என்பதை வானிலை மையம் தெளிவாகத் தெரிவிக்கவில்லை. இருந்தபோதிலும் அதற்கு தேவையான முன்னெச்சரிக்கைகளை எடுத்துள்ளோம்.

**1 கோடியே 24 லட்சம் பேருக்கு முன்னெச்சரிக்கை குறுஞ்செய்தி!**

திருமண மண்டபங்களை தற்காலிக முகாம்களாக மாற்ற அறிவுறுத்தியுள்ளோம். ஒரு கோடியே 24 லட்சம் பேருக்கு புயல் முன்னெச்சரிக்கை குறித்து குறுஞ்செய்தி அனுப்பப்பட்டுள்ளது.

---

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!.....முதல் பக்கத் தொடர்ச்சி

டித்வா புயல் இப்போது சென்னைக்கு தென்கிழக்கே நிலை கொண்டுள்ளது. இந்த புயல் தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்கள் வழியாக நகரக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் நமக்கு தெரிவித்திருக்கின்றது.

அதனால் இரண்டு தினங்களிலும் தமிழ்நாட்டின் வடமாவட்டங்களில் கனமழை பெய்யக் கூடும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

இதுவரை தமிழ்நாட்டில் அதிகபட்சமாக நாகை மாவட்டத்தில் நேற்று 23.0 செ.மீ, இன்று 7.0 செ.மீட்டர் என்று இரண்டு நாட்களிலும் சேர்த்து 30 செ.மீட்டர் அளவிற்கு மழை பதிவாகியுள்ளது.

தமிழ்நாட்டின் நீர்த்தேக்கங்களில் தற்போது 85 சதவீதம் நீர் இருப்பு உள்ளது. இதனால் பயப்படும்படியான சூழல் ஏதுமில்லை. கனமழை காரணமாக மீட்பு மற்றும் நிவாரண பணி நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநில பேரிடர் மீட்பு படையின் 16 குழுக்களும், தேசிய பேரிடர் மீட்பு படையின் 12 குழுக்களும் கடலோர மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

**மீனவர்களுக்கு அறிவுறுத்தல்!**

பேரிடர் சூழலை திறம்பட கையாள்வதற்காக கூடுதலாக தேசிய பேரிடர் மீட்பு படையின் 10 குழுக்கள் வருவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மீன வர்கள் இன்றும், நாளையும் மீன்பிடிக்க கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று தமிழ்நாடு அரசு அறிவுறுத்தியிருக்கின்றது.

மீட்பு பணிகளுக்காக 1,185 படகுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. உயிரிழப்புகளை தவிர்க்க வேண்டும் என்று நம்முடைய அரசு முழுவீச்சில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. தற்போது வரை பெய்த கனமழையால் சுமார் 20,000 ஹெக்டர் பயிர்கள் நீரில் மூழ்கியிருக்கின்றது. வெள்ளம் வடிந்ததும் இது தொடர்பான கணக்கெடுப்பு நடத்தப்படும்.

கனமழை காரணமாக அதிக மழை எதிர்கொண்ட மாவட்டங்களில் 26 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த முகாம்களில் தற்போது வரை மொத்தம் 1,836 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தேவையான குடிநீர் வசதி, உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அனைத் தும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்படுபவர்களுக்கு வழங்குவதற்காக 5 கிலோ அரிசி பாக்கெட்டுகள் 5 லட்சம் எண்ணிக்கையில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் அனைத்து துறையினரும் முறையாக ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று எங்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்கள்.

**பொது மக்களுக்கு எச்சரிக்கை!**

தமிழ்நாட்டின் வடமாவட்டங்களில் மிக கனமழை பெய்யக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே பொதுமக்கள் அவசியம் இல்லாமல் வீட்டைவிட்டு வெளியே வர வேண்டாம் என்று அரசு கேட்டுக் கொள்கின்றது.

கனமழை சூழலை தொடர்ந்து கண்காணித்து வருகின்றோம். அரசு எடுக்கின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் தயவு செய்து பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம். எனவே இந்த பேரிடர் நேரத்தில் ஒருங்கிணைந்து பொறுப்புடன் செயல்படுவோம். இந்த சூழலையும் கடந்து வருவோம் என்று துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, துணை முதல மைச்சர் அவர்கள் சென்னை பெருநகர மாநகராட்சி அலுவலகத்தில் செயல்பட்டு வரும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் மிகப்பெரிய எல்.ஈ.டி கண்காணிப்பு திரைகளில் வெவ்வேறு சுரங்கப் பாதைகளில் போக்குவரத்து சீராக நடைபெறுகின்றதா என்று சுர ங்கப்பாதைகளில் உள்ள கண்காணிப்பு கேமராக்கள் மூலம் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தின் 1913 என்ற உதவி எண்ணிற்கு தொடர்பு கொண்ட பொதுமக்களிடம் புகார் குறித்த விவரங்களை தானே கேட்டறிந்தார். சமூக வலைதளங்களில் தெரிவிக்கப்பட்ட புகார்கள் குறித்து கணினியில் பார்வையிட்டு, எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை கள் குறித்து ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின் போது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன், வருவாய் நிருவாக ஆணையர்/கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் எம்.சாய்குமார், சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பேரிடர் மேலாண்மை ஆணையர் சிஜி தாமஸ் வைத்யன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருத்துறைப்பூண்டி ஒன்றிய இளைஞர்அணி துணை அமைப்பாளர் எம்.கே.வெங்கடேஷ் ஏற்பாட்டில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வில் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் தாட்கோ தலைவர் நா.இளையராஜா பங்கேற்று ஆதரவற்ற முதியோர்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார். இதில் ப.பிரகாஷ், வினோத்குமார், எம்.பி.எடிசன், பொதுக்குழு உறுப்பினர் செல்வஜெயதேவன், சேது. முருகானந்தம், சீனிவாசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கோ.சி. மணி

### டிசம்பர் 2 (2016)



**தலைவர் கலைஞர் அவர்களால் 'தம்பி மணி' என பாசம் பொங்க அழைக்கப்பட்ட கழகத்தின் தளகர்த்தர்களில் முதன்மையானவராகத் திகழ்ந்த இவர், மிட்டா, மிராசுகள் நிறைந்த தஞ்சை மாவட்டத்தில் ஒரு சாதாரண, தொண்டனாக திராவிட இயக்கக் கொள்கைகளையே தமது மூலதனமாகக் கொண்டு அதனை நெஞ்சில் ஏந்தி வலம் வந்தவர். சிறு வயது முதலே தன்னை இயக்கத்தில் ஒப்படைத்துக் கொண்டு ஓயாது பணியாற்றிய உயரிய பண்புக்கும் – எளிமைக்கும் சொந்தக்காரர்.**

**தந்தை பெரியார் அவர்களின் மேடைப் பேச்சால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்தில் இணைத்துக் கொண்ட இவர், கழகம் தொடங்கிய 1949–ஆம் ஆண்டிலேயே மேக்கிரி மங்கலம் கிராமக் கிளையின் பொருளாளராகவும் – மயிலாடுதுறை வட்டக்கிளைச் செயலாளராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – மாவட்டக் கழகச் செயலாளராகவும் – மண்டலப் பொறுப்பாளராகவும் – உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகவும் செயல்பட்டு, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் கழகத்தை வளர்க்க ஓய்வறியாது பாடுபட்டவர்! தலைவர் கலைஞர் அவர்களின் சொல்லே அவருக்கு வேத வாக்கு எனச் செயல்பட்டவர்.**

**தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்காக மட்டுமின்றி, தமிழக விவசாயிகளுக்காகவும் போராட்டங்கள் பல நடத்தியதோடு மட்டுமல்லாமல், இவர் கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர். குறிப்பாக நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.**

**இவர் குடந்தை மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் சந்திரசேகர்புரம் கூட்டுறவு மொத்தவிற்பனைப் பண்டக சாலையின் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**இவர் 1962, 1989, 1996, 2001, 2006 என ஐந்து முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1968–ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இரண்டு முறை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றினார். 1989, 2006 ஆகிய இரு முறை வேளாண்மைத் துறை அமைச்சராகவும் – 1996ல் உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் தலைவர் கலைஞர் தலைமையிலான அமைச்சரவையில் திறம்படப் பணியாற்றியவர்.**

**2001ல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் இவருக்குப் பெரியார் விருதினை, தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.**

**"என்னரும் தளகர்த்தர் கோ.சி.மணி, எங்கோ போய்விட்டாரே!" என தலைவர் கலைஞர் இரங்கல் தெரிவித்துள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**